அவ்வளவு விரைவிலே நாமும் இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதாக இருக்கிறோம். அதைப்பற்றி இந்த அரசு மத்திய அரசோடு அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறது.

தமிழக மின் கழகம்

மு.ப. 9–30 * 116 வினா.—திரு. நா. வீராசாமி : மதிப்பிக்குறிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேல்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு மின் கழகத்தில் பொது மக்களின் பிரதிநிதியாக சட்ட மன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரை "Board Member" ஆக சேர்த்துக் கொள்ளும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்திய மின்சாரம் (வழங்குதல்) சட்டம் (1948)-ன் செக்ஷன் 5 (6) பிரிவின்படி தமிழ் நாட்டு மின் கழகத்தில் சட்டமன்ற உறுப்பினரையோ அல்லது பாராளு மன்ற உறுப்பினர்களில் ஒருவரையோ அங்கத்தினராக நியமிக்க இயலாது.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் மின் திட்டத்தில் நம் அரசாங்கத்திற்கும், கேரள அரசாங்கத்திற்கும், நீராறு, பெரவாரிப் பள்ளம் இவைப்பற்றி நேரில் பேச்சுவார்த்தைகள் நடத்தி தீர்வுகாண நம் மாநில மின் துறை தலைவரை கேரளத்திற்கு அனுப்பு வார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அது பற்றி சோனல் கவுன்சிலில் பேசி முடிவு எடுக்கப்பட்டு, இந்த இரண்டு சர்க்கார்களும் தனித்தனியாக அவரவர்களுடைய கோரிக்கைகளை விளக்கி அறிக்கைகள் தயாரிக்கப்படவேண்டும் என்றும், அதன்பிறகு இரண்டு அரசின் அதி காரிகளும், தேவைப்பட்டால் அமைச்சர்களும், பேச்சு நடத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*117 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குறிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத் தில் நடந்து கொண்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் அதற்கான காரணங்கள் யாவை ?.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) மதுரை அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இந்த ஆண்டில்தான் (1966–67) தற்காலிக உற்பத்தி நடந்தது. அதனால் இந்த ஆலை நஷ்டத்தில் நடக்கிறதா என்பது இப்பொழுது சொல்வதற்கில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ஆலை ஆரம்பித்து சில ஆண்டுகள் ஆகியும், சென்ற ஆண்டு தேர்தல் சமயத்திலே, எலக்ஷனுக்காக சில நாட்கள் நடத்திவிட்டு, இன்றைக்கு மூடி இருக்கிறது. அது நடக்காததற்குக் காரணம் என்ன? பல கோடி ரூபாய்கள் மூலதனமாகப் போட்டு, ஆலை நடக்காமல் இருக்கிறது. அதை இனிமேலாவது நடத்த என்ன நட வடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு இந்த ஆலைக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது. ஒரு ஆயிரம் டன் கரும்பு பிழியும் தொழிற்சாலையாக இருக்கும் என்ற நோக்கத்தோடு இது ஆரம்பிக்கப்பட்டது. 23–12–1966-லிருந்து இது பணி